Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 05 (19 - 05 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 90

## விசேட பரீட்சை மீண்டும் 23 இல் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான விசேட க. பொ. த உயர்தரப் பரீட்சை இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி தொடக்கம் யூன் மாதம் ஐந்தாம் திகதி வரை மீண்டும் நடைபெறவுள்ளது. 1990 க. பொ. த (உயர்தரம்) பரீட்சையின் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளே மீண்டும் நடைபெறவுள்ளன. (6 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் வழமையாகிவிட்ட தமிழர் கடத்தலும், படுகொலையும்

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழர் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதும், கடத்தப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும் நிகழ்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் தமிழர் சொத்துக்கள் சூறையாடப்படுவதும், தீயிடப்படுவதும் தொடர்வதாகவும் தெரியவருகின்றது.

கடந்த மூன்று தினங்களில் மட்டும் பத்துத் தமிழர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இருவர் காயமுற்றுள்ளனர். ஏழுக்கு மேற்பட்டோர் கைதாகியோ கடத்தப்பட்டோ உள்ளனர். இவர்கள் பற்றிய தகவல் ஏதும் இல்லை.

★ கடந்த வியாழக்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாகாமத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் ஒன்பது தமிழ்ப் பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவரை இராணுவத்தினர் கைதுசெய்த இடத்திலேயே சுட்டுக்கொன்றுள்ளனர். கைதுசெய்யப்பட்ட ஏனையோரின் நிலை பற்றி இதுவரை தகவலெதுவும் கிடைக்கவில்லை. எனினும் இவர்களும் இவ்வாறே கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

★ இதேதினம் 5.30 மணியளவில் மட்டக்களப்பு வாகரையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணியில் சிக்கிய கவசவாகனம் சேதம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் கவச வாகனமொன்று விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணி வெடியில் சிக்கிச் சேதமானதாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சாகாமம் என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த நிலக்கண்ணிவெடியில் இராணுவ கவசவாகனம் ஒன்று சிக்கிச் சேதமானது.

இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் இதுவரைகிடைக்கவில்லை.

## கொள்ளையிட ரெலோவில் தனியான ஆயுதப் பிரிவு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து செயல்லும் ரெலோ குழுவினர் மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து அங்கிருக்கும் நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச்செல்கின்றனர்.

இக்கொள்ளைக்கென இவர்களின் தனியான ஒரு இராணுவப் பிரிவு செயல்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

## புதிய திட்டத்தின் பிரகாரம் 28,694 பேருக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

புதிய ஓய்வூதியத் திட்டப் பிரகாரம் இளைப்பாறியவர்களில் 28,694 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் தொடர்பாக மொத்தம் 35,400 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

சுற்றுநிருபம் 14/90 இன் கீழ் இளைப்பாறியவர்களது விண்ணப்பங்கள் தொடர்பாக (6 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் மீதான 70 வழக்கிற்குத் தீர்ப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பான எழுபது வழக்குகளுக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்புவழங்கியுள்ளது. இத்தீர்ப்புகள் மூன்று மாத காலத்துக்குள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 15 வழக்குகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும்படி அரசாங்கத்திற்குப் பணிக்கப்பட்டுள்ளது. 30 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பது சட்டப்படி நியாயமானது என்று தீர்க்கப்பட்டுள்ளன. மேலும் 20 வழக்குகளில் தடுப் (6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜேர்மன், பிரான்ஸ், லத்தீன் மொழிகள்

## க. பொ. த. (சாதாரணம்) பாடத்திட்டத்தில் இணைப்பு

(கொழும்பு)

ஆங்கில இலக்கியம், ஜெர்மன், லத்தீன, பிரெஞ்சுமொழிகள் க. பொ. த (சாதாரணம்) பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். இவை மாணவர்களின் விருப்பப் பாடங்களாகக் கருதப்படும் 1992 இல் இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இந்தத் தகவலை பரீட்சைப்பகுதி ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

க. பொ. த. (உயர்தரம்) வகுப்பில் அந்நிய மொழிக (6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. கல்வி திணைக்களத்தில்

## இருநூறு ஊழியர் ஓய்வுபெற விண்ணப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் 200 ஊழியர் ஓய்வூதியம் பெற விண்ணப்பித்துள்ளார்கள். புதிய திட்டத்தின்கீழ் இளைப்பாறிய இவர்களுக்கு இதுவரை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

கல்வித் திணைக்களத்தில் கணக்காளரும், நிர்வாக உத்தியோகத்தரும், எழுதுவினைஞர்களும் இல்லாமை தான் கொடுப்பனவுகள் தாமதப்படுவதற்கான காரணமாம்.

## அகதிகள் நிவாரணத்தை அதிகரிக்க அரசு மறுப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு அசம்பாவிதங்களினால் பாதிப்புற்று அந்த மாகாணத்திலும் வெளியிடங்களிலும் உள்ள அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்திற்கான தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என்று புனர்வாழ்வு, புனர்நிர்மான அமைச்சு செய்த சிபாரிசினை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

## கடைப் பொருள்களுக்கு தீவைப்பு

(மட்டக்களப்பு)

கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த 15ஆம் திகதி காலை ரோந்து சென்ற இராணுவத்தினர் கொடுவாமடுச் சந்தியில் இருந்த கடை ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்த பொருள்களை எடுத்து வீதியில் போட்டு தீவைத்துள்ளனர்.

## தமிழர் உடைமைகள் இராணுவத்தால் சூறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல கிராமங்களிலும், ரெலோ குழுவினரதும் இராணுவத்தின் கொடூரமான கொலைகளுக்கு அஞ்சி வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாகச் சென்ற மக்களின் வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டு தளபாடங்கள், கதவு நிலைகள் யாவும் கொள்ளையிடப்பட்டு லொறிகளில் ஏற்றிச் செல்லப்படுகிறது இந்தப் (6ஆம் பக்கம் பார்க்க)

## காளைபோட்டமடுவில் பொறிவெடித் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காளைபோட்டமடு கிராமத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல்மேற்கொள்ள முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீதுவிடுதலைப்புலிகள் பொறிவெடித்தாக்குதலையும் கிளைமோர்த் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக்காலை 5.30 மணியளவில் உன்னிச்சை, மவுனதீவு ஆகிய இரு இடங்களிலும் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இணைந்து காளைபோட்டமடு என்ற கிராமத்தைச் சுற்றிவளைக்க முயன்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றது (6ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் மீதான கொடுமைபற்றி

# அவுஸ்ரேலிய ஜனநாயகக்கட்சி அக்கறை கொண்டுள்ளது

(கான்பாரா)

தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவது பற்றி அவுஸ்ரேலிய ஜனநாயகக் கட்சி அதிக அக்கறை கொண்டுள்ளது என்று அவுஸ்ரேலிய ஜனநாயகக் கட்சித் தலைவர் திருமதி ஜெனற் பவல் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கே. சி. ஆடியபாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 20 முதல் 23 வரை வல்வெட்டித்துறை மூர்க்கத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. இது தொடர்பாக வல்வெட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரிடம் புகார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேறி கொழும்பில் கல்வி கற்கும் மாணவர்களிடம் அதிபர்கள் பணம் அறவிடுகிறார்கள். இந்தச் செயல் மேற்படி மாணவர்களுக்குப் பெரும் சுமையாகும். இதை நிறுத்த உதவுமாறு அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விடுதலைப் போராட்டமே வரலாற்றை நிர்ணயிப்பது

(யாழ்ப்பாணம்)

-பரா

ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களே உலக அரங்கில் வரலாற்றை நிர்ணயிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றன. இதை முன்னெடுக்க புதிய உறுப்பினர்கள் எம்முடன் இணைய முன்வர வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவு கொள்கை முன் (6ஆம் பக்கம் பார்க்க)

## 103-ம் நாள் நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்
27. 07. 1974

தமிழீழ விண்ணில்
05. 02. 1991

### வீரவேங்கை தமிழ்மணி
### ( இரத்தினம் நிரஞ்சன் )

( கொக்குவில் இந்துக்கல்லூரி O/L மாணவன் )

துடுப்பான நடையும்
எடுப்பான தேசமும்
யாருக்கும் அஞ்சாத சுபாவமும்
யாவரையும் சிரிப்பூட்டும் பேச்சும்
மாயமாய் மறைந்ததுவோ?

தமிழீழக் காற்றதனை
சுதந்திரமாய் சுவாசிக்க வேண்டுமென்றெண்ணி
கரம் அதில் ஆயுதமேந்தி
களம் குதித்து போர் தொடுத்தாய் எதிரியுடன்
மண் மீட்டுத் தருவாயென்று
எண்ணியிருந்த வேளையிலே
அரக்கர் ஏவிய நச்சுப்புகை
மாய்த்ததுவே உன்னுயிரை
விண்ணுலகம் நீ சென்றாலும்
உன் இலட்சியப் பாதை என்றுமே மாறாது!

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள், மைத்துனன்,
தோழர்கள்

அக்[illegible] வீதி,
கொண்டாவில் வடக்கு,
கொண்டாவில்.

(B-2538)

## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

சாளி மோட்டார் சைக்கிள் திறப்புடன் சேர்ந்த திறப்புக் கோர்வை ஒன்று இணுவிலுக்கும் ஏழாலைக்கும் இடையில் 15-5-90 அன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சுன்னாகத்திலுள்ள ''ஹப்பி எலக்ட்டிக்கல்ஸ்'' என்ற நிறுவனத்தில் ஒப்படைக்கவும். (B/2536)

**வகுப்புக்கள்**

Cake Icing Sugar Craft, General Cookery, Hair Dress-ing புதிய பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. உடன்தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy 71 B, Nayanmar Road, Off Kachcheri Nallur Road, Nallur, Jaffna (/R1386)

**நீமியா உரம்**

சிறுபோக நெற்பயிர் செய்கைச் நீமியா உரத்தை அடிக்கட்டு உரமாகப்பாவித்துபயன் பெறுங்கள். விளைச்சலைப் பெருக்குகிறது.

பயிரைத் தாக்கும் நோய்கள் பூச்சிகளைத் தடுக்கிறது; ஒழிக்கிறது. கிலோ பக்கெற் ஒன்று ரூ. 10/- மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம் (B/2510)

### சங்கத் தலைவர் கைதாகிவிடுதலை

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினர் கடந்த வாரம் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒருவரைக் கைது செய்து தடுத்து வைத்த பின்னர் சில நாட்களில் விடுதலை செய்துள்ளனர். நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான சங்கரப்பிள்ளை என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டவராவார். முகாமில் வைத்து இவர் படையினரால் நையப்புடைக்கப்பட்டாரென தெரிகிறது. (22)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 19

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**அகிலன்** (சின்னத்துரை சிவபாலன் - புதுக்குளம் இயக்கச்சி)

**குட்டி** (கனகசபை இருபாகரன் - பளை)

1989 ஆம் ஆண்டு கோழியகுளத்தில் வீரமரணமடைந்த

**கப்டன் மணியம்**
(இராசேந்திரம் வேதநாயகம் - புதுக்குடியிருப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வருடம் தோறும் வருமிந் நாளில்
பெருகும் கண்ணீர் உங்கள் நினைவால் -
வரும்பகை
கண்டு அஞ்சிடார் களம்நாடி சென்றார்
மண் மீட்க தந்தார் உயிர்!
குட்டியோடு அகிலன் கப்டனான மணியம்
மட்டில்லாப் பெரும் புகழ் பெற்றார்-கொட்டிய
குருதியால் தாய்மண் சிவந்திட
செருவினில் நின்றார் சிலிர்த்து!
இந்த நாளில் இவர்களை நினைந்து
நொந்திடும் போதிலும் தொடரும் பயணம்!
தாயகம் விடுதலை அடையும் வரையும்!!

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2524)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### லெப்டினன்ட் கேணல் கிறேசி

(கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)

(வட்டக்கச்சி)

வீரஜனனம்
19-08-1962

வீரமரணம்
19-04-1991



புல்லின் நுனி கூட இல்லாப் பெருவெளியில்
எல்லை மீறிய எதிரிப் படைகளை
மோதி அழித்திடும் பணியில் கிறேசி
சாவை அணைத்தொருசரித்திரமானான்.

பரப்புக் கடந்தான் வரப்பைக் கடந்து
இராணுவ படையணி வருதலைத் தடுக்க
மூண்ட சண்டையில் முனைப்புடன் நின்று
மண் மீட்பிலொரு மாவீரன் ஆனான்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2539)

## மாபெரும் நாடகப் போட்டி

கொழும்புத்துறை மேற்கு சன சமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் நாடகப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்பும் குழுக்கள் நாடகப் பிரதிகளுடன் 22-5-1991 புதன்கிழமைக்கு முன் நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். முதல் இரு இடங்களை பெறும் நாடகங்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

கொ. மே. ச. ச. நிலைய
நிர்வாகத்தினர்

(B-2540)


# தமிழீழ மீட்பிற்காக வருடம்

# 75 கோடி செலவு செய்கிறோம்

— யோகி

(கிளிநொச்சி)

"தமிழீழப் போராட்டத்திற்கு வருடந்தோறும் எழுபத்து ஐந்து கோடி ரூபாவிற்கு மேல் செலவு செய்கிறோம். இதை உணராமல் இரண்டு பவுண் நகையைக் கொடுத்து தாம் தாராளமாக உதவி விட்டதாக எண்ணிச் சிலர் தேவையற்ற பேச்சுக்களில் ஈடுபடுகின்றார்கள்."

இவ்வாறு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் பொ. பிரசாந் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் செயலாளர் நாயகம் யோகி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

தமிழ் மக்களையும் தமிழீழத்தையும் காக்கும் புனிதப் போரில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இப்போரில் விடுதலைப் புலிகள் ஆயிரக் கணக்கில் வீரமரணமெய்தியுள்ளனர். பல ஆயிரம் புலிகள் காயமுற்றனர். பல நூற்றுக் கணக்கானவர்கள் ஊனமுற்றுள்ளனர். அப்படியிருந்தும் நாம் எமது போராட்டத்தைக் கைவிட்டு ஓடிவிடவில்லை. இன்றும் இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு, அவர்களை நிலைதடுமாறச் செய்து விரட்டி அடித்து வருகிறோம்.

அரசாங்கத்தோடு நாம் பேச்சுவார்த்தை நடாத்துவதனால் தமிழீழத்தின் தேசிய கொடியான புலிக்கொடியை அனுராதபுரத்தில் ஏற்றுவதா அல்லது அதற்கு அப்பால் சென்று ஏற்றுவதா என்பதாகத்தான் அமையுமே தவிர சில சலுகைகளைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தை அமையமாட்டாது எனவும் தெரிவித்தார்.

மேலும், அவர் பேசுகையில் எத்தனையோ பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் போருக்கு அர்ப்பணித்து விட்டு, ஆமையைப் போன்று அமைதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் விடுதலை உணர்வு தெருவில் நின்று போராட்டத்தைப் பற்றி கொச்சைப்படுத்திப் பேசுபவர்களுக்கு இருப்பதில்லை.

வீரம் என்பது தமிழ் இனத்தோடு கூடப்பிறந்தது. சேர, சோழ, பாண்டியர் காலத்திலும் சரி பண்டாரவன்னியன், சங்கிலியன் காலத்திலும் சரி எம் மூதாதையர்கள் உயிருக்குப் பயந்து ஓடி மறையவில்லை. எதிரிகளை எதிர்த்து நின்றே போராடினார்கள்.

சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று மக்களை ஒன்று திரட்ட இவர்கள் தவறியதால் தான் இவர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது. எமது தலைவர் பிரபாகரன் இவற்றுக்கெல்லாம் அப்பால் சென்று சகலரையும் ஒன்றிணைத்து ஒரு கொடியின் கீழ் நின்று போராடிவருகிறார் அதனால்தான் அவர் போராட்டத்தில் வெற்றிய டைந்து கொண்டிருக்கிறார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு கரும்புலியும், வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஒரு கரும்புலியும் இணைந்து பருத்தித்துறைக் கடலில் நின்ற கடற்படைக் கப்பலொன்றைத் தகர்த்துத் தாமும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவ்வாறு மக்களை ஒன்றிணைத்த ஒரு தலைவனையும், அவனது படையைப் போன்ற ஒரு சிறந்த கட்டுப்பாடுடைய படையையும் வேறெங்குமே காண முடியாது என்றார். (49)

## சங்கக் கிளையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் கடந்த வியாழன் இரவு கூரை பிரிக்கப்பட்டு உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மேற்படி சங்கத்தின் உடுவில் வீதியில் அமைந்துள்ள கிளை இல. 25 லேயே மேற்படி திருட்டு நடைபெற்றுள்ளது. மேற்படி கடையின்கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர் அங்கிருந்த உணவுப் பொருள்களைத் திருடிக்கொண்டு கடைக் கதவை உடைத்து வெளியேறியுள்ளனர்.

சங்கக்கிளைகள் பலவற்றில் இம்மாதம் திருட்டுக்கள் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)


தமிழீழ மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## அக்கு பங்சர் சிகிச்சை!

மெடிசினா ஆல்ற்றனேற்றிவா அக்குபங்சர்சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் [களுபோவில] விரிவுரையாற்றிவரும், பிரபல அக்கு பங்சர் வைத்திய நிபுணர் டாக்டர் இங்ஸ்லி ரகுநாதன் [D.AC, MD, (TM) F,F (HOM)] அவர்களினால், இல: 121/2 மானிப்பாய் வீதி, யாழ் நகர், இல: 95, யாழ் வீதி, மானிப்பாய், திருமதி, சத்தியமூர்த்தி, ஆடியபாதம் வீதி, கொக்குவில் போன்ற இடங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது, ஆஸ்த்மா, மூட்டுவாதம், பாரிசவாதம், நாரிப்பிடிப்பு, ஒற்றைத் தலையிடி, தோல் வியாதிகள், மனநோய், பாலியல் பிரச்சினைகள், போதை வஸ்து பாவனை மற்றும் நரம்பு தொடர்பான நோய்களுக்கும் மிகவும் வெற்றிகரமாகச் சிகிச்சை அளிக்கப்படும்.

நோயாளர் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

(R/1382)



## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது

## பதவி வெற்றிடம்

1. பதவி: செயலாளர் - 1¹4/08

சம்பளத்திட்டம்: 1005 – 40x5 – 50x10–1705

பிணைப்பணம்: ரொக்கப் பிணை ரூபா 5000 -

கல்வித் தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர் / அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்கான் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகள்.

அல்லது

(இ) பட்டயம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை: 25 - 40 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை தவிர்க்கப்படமாட்டாது)

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களின் விண்ணப்பங்கள் கூடிய கவனத்திற்கு எடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்
யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 05 - 1991

பதில் பொது முகாமையாளர்
15 - 05 - 1991

(B-2534)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



லெப்டினன்ட் வாசு
(துரைராஜா துருபதராஜ்)

வீரஜனனம் 09.03.1970 — வீரமரணம் 19.04.1991

திதி: 20.04.91

19.04.1991 அன்று மன்னார் பரப்புக்கடந்தானில் ஏற்பட்ட மோதலில் வீரமரணம்.

ஆண்டுபிர சாபதியின் சித்திரையைச் சார்பூர்வம்
ஈண்டுதிதி பஞ்சமியே வாசு என்னப் - பூண்டபுகழ்
போராளியாகும் துருபதராஜ் வீரசொர்க்க
ஊராளப் போன தினம்

20.04.91 அன்று அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர் நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 20.05.91-ல் இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பண்டித்தறை,
நெல்லியடி,
கரவெட்டி.

– குடும்பத்தினர்

(B-2542)

# முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்:

19 – 08 – 1962



வீரமரணம்:

19 – 04 – 1991

# வீரவேங்கை லெப்டினனட் கேணல்
# கிறேசி
## (கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)

**19-04-1991 அன்று மன்னார் பரப்புக் கடந்தானில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.**

தங்கத் தமிழீழம் மீட்டிட தம்முயிர் தரும்
வேங்கைகள் படையணி வெல்லும் - எங்கும்
மேவும் புகழ் சேர்க்கும் விடுதலை தேடும்
சாவும் இங்கு சரித்திரமாகும் !

லெப்டினனட் கேணல் கிறேசி மறைந்து நாள்
முப்பத்தொன்று முடிந்து போனது-முப்பது
வயதுப் பருவ இளைஞன் அவனுக்குத்
தாயக விடுதலையே தாகம் !

கிளிநொச்சி கிழக்கு

இராமநாதபுரம் விவசாய உற்பத்திக்குழு,
அம்பாள் நகர் விவசாய உற்பத்திக்குழு,
திருவையாறு விவசாய உற்பத்திக்குழு,
மாயவனூர் சிற்றூரவை,
விவசாய உற்பத்திக்குழு இணைப்பாளர்

(R-1399)

❋ சிந்தனைக்கு ❋

அதிகார மோகமே மோகங்களில் மிகக் கொடியது.
— ஜான் ஹேரிங்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 19.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# தேர்தல் களமா வன்முறைக் களமா?

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நாளை பத்தாவது பொதுத் தேர்தலின் முதலாம் கட்ட வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. தேர்தலுக்கான முழு ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டதாக தேர்தல் கமிஷன் அலுவலகத்தில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இனி வாக்காளர் வாக்களிப்பது மட்டுமே பாக்கி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தேர்தலில் உலக சனத்தொகையில் பத்து வீதமான மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அதேவேளை இந்தியாவில் இருந்து வரும் செய்திகள் மக்கள் வாக்களிப்பதில் தீவிரமாக இல்லை எனத் தெரிவிக்கின்றன.

பொதுவாகவே இந்தியாவில் தேர்தல்களம் வன்முறைக் களமாகக் காணப்படுவதுண்டு. ஆனால் இம்முறை தேர்தல் களம் வன்முறைக் களமாக மட்டுமல்ல ஒரு யுத்த களம் போன்றே காட்சியளிக்கின்றது.

இதுவரை தேர்தல் வன்முறையில் ஐம்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பல வேட்பாளர்களும் அடங்குவர். பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் இதுவரை பத்திற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். பஞ்சாப் மாநிலத்தில் வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்படும் வேகத்தைப் பார்த்தால் ஜூன் மாதத்தில் அங்கு தேர்தல் நடைபெறுமுன் தொகுதிக்கொரு வேட்பாளர் என்ற ரீதியில் கொல்லப்படுவதன் மூலம் தேர்தல் பிற்போடப்படலாம் என எண்ணத் தோன்றுகின்றது. உத்தரப் பிரதேசம், பீகார் மேற்கு வங்காளத்திலும் பெரியளவில் தேர்தல் வன்முறைகள் பெருமளவில் இடம்பெற்று வருகின்றன.

இத்தேர்தல் வன்முறையைத் தடுப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்துள்ள தேர்தல் கமிசன் மாநில அரசுகள் குழப்பங்களை கட்டுப்படுத்தத் தவறின் தேர்தல்கள் பிற்போடப்படலாம் எனவும் எச்சரித்துள்ளது. அத்தோடு பெரும் எடுப்பிலான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

தேர்தல் கடமையில் இலட்சக்கணக்கான ஆயுதப் படையினர் பயன்படுத்தப்படவுள்ளனர். சேவையிலுள்ள ஆயுதப்படையினர் போதாதென்று ஓய்வுபெற்ற இராணுவத்தினரும் தொண்டர்படையினரும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை தேர்தல் களத்தில் ஏற்படக்கூடிய வன்முறையைக் கருத்திற்கொண்டு தேர்தல் கடமையில் ஈடுபடும் 40 இலட்சம் ஊழியருக்கு காப்புறுதித் திட்டத்தையும் தேர்தல் சமிஷன் அறிவித்துள்ளது. இவற்றில் இருந்து இம்முறை தேர்தலின்போது எதிர்பார்க்கப்படும் வன்முறையின் தாக்கம் தெரியவரும்.

ஆனால், சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாக தற்போதைய காபந்துப் பிரதமர் சந்திரசேகரின் அமைச்சரவையால் கலைக்கப்பட்ட தமிழ் நாட்டிலும், அஸாமிலும் தேர்தல் வன்முறைகள் பெரியளவில் இடம்பெற்றதாகத் தகவலில்லை. அதாவது ஒருவர்தானும் இதுவரை தேர்தல் வன்முறையால் கொல்லப்பட்டதாகத் தெரியவரவில்லை.

ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஜனநாயக உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கான தேர்தல் களம் இந்தியாவில் இவ்வாறு வன்முறைக் களமாக மாறுவதற்கு அரசியல்வாதிகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வாக்குகளைத் திரட்டுவதற்குக் கையாளும் குறுக்கு வழிகளே காரணமாகும்.

இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் தேர்தலின் போதும், குடிசனக் கணக்கெடுப்பின் போதுமே இந்தியாவின் பிரஜைகள் எனக் கணிக்கப்படுகின்றார்கள், தமது ஜனநாயக உரிமையைப் பற்றி உணர்ந்தோ, சிந்தித்தோ அறியாத இம்மக்களை ஒவ்வொரு தேர்தலின் போதும் அரசியல்வாதிகள் சாதி, சமய வகுப்புவாத வன்முறைகளுக்குள் இழுத்து விடுகின்றார்கள். இதைத் தொடர்ந்து உரிமையைப்பற்றி அறியாத அப்பாவி மக்கள் உணர்ச்சியால் பலிக்கடாவாகின்றார்கள்.

ஆனால், இந்தியாவில் நிகழும் தேர்தல் வன்முறையை சட்டத்தினால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியிடுபவர்களே இவ் வன்முறைகளுக்குக் காரணகர்த்தாக்கள் ஆவர். இந்நிலையில் அரசியல்வாதிகள் வாக்காளர்களையும் மனிதர்களாகக் கருதினால் அன்றி எதிர்காலத் தேர்தல்களிலும் வன்முறை தவிர்க்கமுடியாததாகும்.

# எல்லையோர அச்சுறுத்தலை எதிர்த்து நிற்கும் மணலாறு

மணலாறு என்றதும், அவ்வூரில் தலை நிமிர்ந்து நிற்கும் காட்டு மரங்களும், தண்ணீர் முறிப்பு அணைக்கரையும், பணத்தைப் பணமென்று பாராமல் முறையாக நீர்ப் பாய்ச்சி, களையெடுத்து, உரம் போட்டுப் பேணிக்காத்து நிற்கும் வயல்களும் தான் நினைவுக்கு வரும். நன் செய், புன் செய் இல்லாத மேட்டுப் பூமியில் தெங்கு காய்த்துச் சொரியும். கடலோரக் கிராமங்களில் தொழில் செய்யும் மீனவர் ஒரு புறம்.

மணலாறு எல்லை மாவட்டம், எல்லைப் பிரதேசம் என்ற நிலையில், மக்கள் நினைவில் வீரமும் இழையோடி நிற்பது சகஜம் தான்.

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் அனர்த்தங்களால் மணலாறு வெறிச்சோடியது. 1990 ஆம் ஆண்டு தமது நிலங்களில் மக்கள் மீளவும் குடியேறினார்கள். வாழ்க்கைகளை கட்டத் தொடங்கியது; தங்களுடைய நிலபுலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சொந்தமாகச் சீவிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தினார்கள். பொருளாதார நடவடிக்கைகள் கருக்கட்டத் தொடங்கின.

மணலாற்றுக் கிராமங்களில் மே முதலாம் திகதி - உலகத் தொழிலாளர் தினத்தன்று குண்டு வீச்சு ஆரம்பிப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னதாக சிறிலங்கா விமானம் வானிலிருந்து துண்டுப் பிரசுரங்களைக் கொட்டி ஊரை விட்டுக்காலி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது ஏதோ ஒரு பரபரப்புநிலவினாலும், மக்கள் தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறத்தயாராகவில்லை. வழக்கமான பாணியில் விவசாயமும், கரையோரக் கடற்தொழிலும் நடந்து கொண்டிருந்தன. ஏப்ரல் 28 ஆம் திகதி துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டன என்றாலும், வழமை போல் இரண்டு தினங்கள் எப்படியோ ஓடி மறைந்தன.....

## உயிர்ச் சேதம் இல்லை

மே தினம் முகலாம் திகதி காலை எட்டு மணியிருக்கும்; ஷெல் தாக்குதல் ஆரம்பமாகியது சூரியன் ஆக்கிரமிக்கத் தொடங்கும் அந்த வேளையிலே குமுளமுனை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணிப் பகுதிகளில் சரமாரியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது முதலாம் திகதி குமுளமுனையில் ஆக மொத்தம்-45 ஷெல்கள். தொடர்ந்தாற் போல் கருநாட்டுக் கேணியில் 15 ஷெல்கள். இரவில் அந்தக் காட்டுக் கிராமங்களின் அமைதியைக் கலைத்த வண்ணம் ஆட்டிலறித் தாக்குதல்கள். இரவில் மணலாறு தூங்கவேயில்லை.

மணலாற்றில் கொக்குத் தொடுவாய் கடலால் சூழப்பட்ட கிராமம் முதலாம் திகதி மதிய வேளை நாயாற்றுப் பக்கமாகக் கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிப் படகுகள் இருந்தாற் போல் பீரங்கித் தாக்குதலைக் கொக்குத் தொடுவாய் மேல் மேற்கொண்டன. முதலாம் திகதி பி.ப. 2.30 மணியளவில் செம்மலை மீதும் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டன. மூச்சு விடாமல் சரமாரியான வான்தாக்குதல் ஒரு புறம். 'மக்களும் படுசிரமத்துடன் குழிகளில் பதுங்கிக் கொண்டனர். மக்கள் முன்னெச்சரிக்கையாக இருந்ததால் உயிர்ச் சேதம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். சிலர் பாதுகாப்புத்தேடி இடம் பெயர்ந்து நகரத் தொடங்கினர். செம்மலைப் பகுதியில் பாதுகாப்புத் தேடித் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இரண்டாம் திகதி வான் தாக்குதலுடன் சேர்ந்தாற் போல் ஷெல்களும் பரவலாக ஏவப்பட்டன. குமுளமுனையை 36 ஷெல்கள் பதம் பார்த்தன. கொக்குத்தொடுவாய்ப் பக்கமாகவும் தாக்குதல்கள் இடம்பெற்றன. மக்கள் பாதுகாப்புத்தேடி அயற் கிராமங்களில் ஒதுங்க வேண்டியதான நிலையும் உருவாகியது. துணைப் படையினரும், சில குடும்பங்களும் தாக்குதல்கள் மத்தியிலும் மன உறுதியுடன் பாதுகாப்பாய் இருந்தனர்.

மணலாற்றின் விளைச்சலும் கடற்தொழிலும், வியாபாரமும், செல்வமும், பிறவும் சிங்கள அரசை அச்சுறுத்தியதோ, என்னவோ? மணலாற்றுக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட பரவலான வான், ஷெல் தாக்குதல்களினால், அப்பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகள் கைவிடப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன.

**மதன்**

## எழுபது வீடுகள் சேதம்

குமுளமுனைக் கிராமம் பொன் விளையும் பூமி. அதை மணலாற்றுக் கிராமத்தின் பழமுதிர்ச்சோலை எனலாம். அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள் சேதமடைந்து கிடந்தன. வீதியின் திருப்பத்தில் கடையொன்று 'ஒன்றடி மண்ணடியாய்' இடிந்து போய்க் கிடந்தது இது ஊரில் பெரியகடை.

துணைப்படை உறுப்பினரான திரு க. சுப்பிரமணியத்தை அவர் வீட்டில் சந்தித்தோம். வயது ஐம்பதுக்கும் அறுபதுக்குமிடையில் இருக்கலாம். மனக்குமுறல்களைச் சொல்லத் தொடங்கினார்.

குமுளமுனையில் குண்டு விழுந்ததும் ஒருவித பரபரப்புத் தொற்றிக் கொண்டது. பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தால் பலர் வீடுகளை விட்டு வெளியேறி விட்டார்கள். நான்கு, ஐந்து குடும்பங்கள் தான் இப்போதைக்கு இங்கு இருக்கினம். மரவள்ளி, கச்சான் போன்ற பயிர் வகைகள் கால்நடைகளுக்கு இரையாகி விட்டன. விவசாயமும் கால்நடைகளாலும், காட்டு மிருகங்களாலும் அழிக்கப்பட்டு விட்டது.

பக்கத்தில் குண்டு விழுந்து வீடு கூட ஒரு பகுதி எரிந்தது. நான் நின்ற படியால் நெருப்பை அணைக்கக் கூடியதாக இருந்தது.

செய்கைக்காக வரம்பு கட்டி உழுத நிலம் அப்படியே கிடக்கிறது என்று விசனித்தார். ஊர்மக்கள் இடம் பெயர்ந்து தண்ணீர் ஊற்று, புதுக்குடியிருப்புக் கிராமங்களில் வாழ்கிறார்கள் என்றார்.

குமுளமுனை 6 ஆம் வட்டாரம் பக்கத்துத் தெருவில் திருமதி நிர்மலகுமாரி சிவமதியைச் சந்தித்தோம். மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டார்.

நாம் நுழையும் போது மாமர நிழலில் நெல்குத்திக் கொண்டிருந்தார்.

வீடு குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டதனால் வேறு வீட்டில் மாறி இருக்கிறோம். எமக்கு ஊரை விட்டு ஓட விருப்பமில்லை என்றார்.

பாடசாலை மாணவரான த. கனகசபை சிவமதியின் வீட்டுப் பக்கமாக வந்தார். க.பொ.த. (சாதாரணம்) வகுப்பு குமுளமுனை மகாவித்தியாலயத்தில் படிக்கிறார். அவருடன் பேச்சைக் கொடுத்தோம்.

அம்மாவுடன் இருக்கிறேன். குண்டுவிழும் போதும் வீட்டுப் பக்கமாகத்தான் இருந்தோம். குண்டுகளால் பெரிய பாதிப்பு ஒன்றும் இல்லை. பங்கரில் இருந்தோம் என்றார் கனகசபை.

குமுளமுனையில் ஆங்காங்கே வாழைகளும், மரங்களும் சரிந்து கிடக்க, ஊர் அமைதியாகவே இருந்தது. பிற்பகலில் மூன்று மணியளவிருக்கும் அப்பகுதியில் திருமதி ஞானப்பூங்கோதை கணபதிப்பிள்ளையைச் சந்தித்தோம். ஐந்து பிள்ளைகளின் தாய் கணபதிப்பிள்ளை அன்பாக எமக்கு இளநீர் வழங்கினார். சிறிது நேரம் கழித்து -

ஊரைவிட்டு ஓடியவர்கள் இப்போது வந்து போகிறார்கள். ஊரடங்கு எடுத்தால் வரலாமென்று இருக்கிறார்கள். விமானத் தாக்குதலைச் சமாளிப்பதற்கு இடம் பெயர்ந்து போனார்கள். ஊர்மக்கள் புதுக்குடியிருப்புக்குச் சென்று விட்டார்கள்.

நாங்கள் பதுங்கு குழியில் பாதுகாப்பாகத்தான் இருந்தோம். வீட்டின் மேலும் குண்டு போட்டார்கள் என்று வீட்டைக் காட்டினார். வீடு இடிந்து போய்க் கிடந்தது. இந்தியப் படையும் இவர்கள் வீட்டில் முகாமிட்டிருந்தது என்றார்.

இப்போது திருக்கோணமலையில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்குக் கட்டிக் கொடுத்த வீடுகளில் வாழ்கின்றோம். அவர்கள் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பில் வாழ்கிறார்கள்.

குமுளமுனையில் திருக்கோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் சுமார் 450 பேர் வரை தங்கியிருந்தார்கள். இவர்கள் பாதுகாப்புத் தேடி முள்ளியவளை, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.

தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏலவே மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. ஒரு சிலர் காயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். சொத்துக்கள் தான் சேதம் 70 வீடுகள் வரை முற்றாகச் சேதமுற்றிருந்தன.

> மணலாறு மக்களை உடனே வெளியேறச் சொல்லி ஏப்ரல் 28 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அசம்பாவிதம் நடக்கும் என்று மக்கள் அஞ்சவில்லை. மணலாற்றுப்பகுதி அமைதியாகவே இருந்தது. மே முதலாம் திகதி காலை எட்டு மணியளவில் மூர்க்கத்தனமான தாக்குதல் ஆரம்பமாகியது. இரவிலும் தாக்குதல் தொடர்ந்தது.

(தொடரும்)

# ஷெல்லினால் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா இராணுவ முகாமில் இருந்து கடந்த வெள்ளி காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கே. செல்வராஜா (வயது 40, சேமமடு) என்பவர் காலில் காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஈழ இராஜ்யத்தைப் பேண மூலவளம் போதாது

## சிறிலங்கா ஜனாதிபதி கவலை

(மாத்தறை)
தமிழ்ப் புலிகளுக்கு ஒரு போதும் ஈழ இராஜ்யம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் ஈழ இராஜ்யத்தைத் தோற்றுவித்தால் அவர்களுக்கு கிடைக்கும் மூல வளங்கள் அந்த ஈழ இராஜ்யத்தை நடத்திச் செல்லப் போதாததாக இருக்கும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா அவர்கள் கூறியுள்ளார்.

வெள்ளவாயாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட சிறிலங்கா ஜனாதிபதி மேலும் பேசுகையில், 25,000 சதுர மைல் பரப்புள்ள இந்த நாட்டின் அனைத்து மூலவளங்களையும் பயன்படுத்தினாலும் அதைக்கொண்டு நாட்டை சகலதுறைகளிலும் நிர்வகிக்கப் போதாதிருக்கின்றது. இதனால் தான் வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற வேண்டியிருக்கிறது. ஈழ இராஜ்யம் நிறுவினால் எவ்வாறு இருக்கும்? வேறொரு சக்தி அந்த ஈழப் பிரிவினை இராஜ்யத்தை விழுங்கி விடும். வேறொரு இராஜ்யம் நிறுவும் எண்ணத்தை புலிகள் மாற்றிக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு ஈழம் தவிர்ந்த மற்றெல்லாம் இடைக்கச் செய்வேன் எனவும் குறிப்பிட்டார்.

## அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

# இடம் பெயர்ந்தோருக்கு உணவு பொருள் வழங்கியது

(யாழ்ப்பாணம்)
வன்னி, மணலாறு பிரதேசங்களில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புற்று இடம்பெயர்ந்து வந்த 1500 குடும்பங்களிற்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது. இக்கழகத்தினால் வவுனிக்குளம் மல்லாவி, துணுக்காய், மாங்குளம், முறிகண்டி ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு மேற்படி நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் மணலாறு பிரதேசத்தில் இருந்து வெளியேறாது தொடர்ந்தும் அங்கு இருந்து வரும் மக்களுக்கு அரிசி, மா, சீனி, பால்மா, கருவாடு, பயறு, தேயிலை, சோயாமீற் போன்ற உணவுப் பொருள்களை மேற்படி கழகம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம்

# அமைத்த 150 வீடுகள் இராணுவத்தால் சேதம்

(யாழ்ப்பாணம்)
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினரால் யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைத்த 150 வீடுகள் ஸ்ரீலங்கா இராணுவ மற்றும் வான் படைகளின் தாக்குதல்களில் முற்றாக சேதமடைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமாக மொத்தம் 750 வீடுகள் இடம் பெயர்ந்த மக்களுக்காக மேற்படி நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் மேற்படி எண்ணிக்கையான வீடுகள் கடந்த பல மாதங்களாக சிறிலங்கா அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தகர்த்தெறியப்பட்டுள்ளன. (ஈ)

# ஆஸ்பத்திரியில் குழந்தையின் சங்கிலி திருட்டு

(நல்லூர்)
பட்டப்பகலில் யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் குழந்தையின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் மருந்து எடுத்துக் கொண்டு திரும்பும் வழியில் மேற்படி சம்பவம் நடைபெற்றது. இவ்வாறு திருடப்பட்டது சந்திரன் துசாந்தன (வயது 1) என்ற பாலகனினுடையது ஆகும். அங்கு நின்றவர்கள் முயன்றும் திருடனைப் பிடிக்க முடியவில்லை எனத் தெரிய வருகிறது. (85)

## தொண்டர் ஆசிரியர்

# களநிலைப் பரீட்சை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)
தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்திற்கான நடாத்தப்படவிருக்கும் களநிலையிலான நேர்முகப் பரீட்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பவர்களின் தகைமை தொடர்பாக மிக நுணுக்கமாக ஆராய்ந்து சந்தேகமூட்டும் வகையிலான தகைமைகளைக் கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்கள் மட்டும் களநிலையிலான நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டும் என்றும் திருப்திகரமான தகைமைகளையும், தரவுகளையும் சமர்ப்பித்தவர்களுக்கு கள நிலையிலான நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஈ)

## பட்டமளிப்புவிழா

(நல்லூர்)
யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா (1990) எதிர் வரும் ஜூலை 6 ஆம் திகதி நடைபெறும். கைலாசபதி அரங்கில் இவ்விழா நடைபெற உள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் எஸ். குமாரமூர்த்தி தெரிவித்தார்.

# லஞ்சக் குற்றச்சாட்டில் அதிபர்கள் மீது விசாரணை

(கொழும்பு)
கல்லூரி அதிபர்கள் லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தினால் விசாரிக்கப்படுகின்றார்கள் களுத்துறையிலும் நாவலப்பிட்டியிலும் பிரபல்யமான கல்லூரிகளின் அதிபர்கள் ஐந்துபேர் தரம் ஒன்றில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கைலஞ்சம் பெற்றுள்ளார்கள்.

கல்வி அமைச்சின் பிரமாணங்களின்படி நன்கொடை வழங்கும் பெற்றோர், அதை அந்தப் பகுதிக் கல்வித் திணைக்களத்திடமே செலுத்த வேண்டும். அதிபரிடம் அல்ல என லஞ்ச ஆணையாளர் திருமதி நெவும் கமகே தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் வெகுவிரைவில் இடைநிறுத்தம் செய்யப்பட உள்ளார்கள். மேலும்பல அதிபர்கள் பற்றி லஞ்ச ஆணையாளர் திணைக்களம் விசாரணைமேற்கொண்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு விடுதலைப்புலிகளின் துணைப்படையில் பயிற்சி பெற்றவர்களுக்கும் புலிகளின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்த ஆண்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இக்கலந்துரையாடலுக்கு வலிகாமம் பிரிவைச்சேர்ந்த அனைவரும் சமூகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

# தோட்டத்திற்குள் ஆணின் சடலம்

(நல்லூர்)
தோட்டத்திற்குள் அடிகாயங்களுடன் ஆணின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை மருதனாமடம் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றிலேயே மேற்படி சடலம் கண்டுபிடிக்கப்பட்டது இது உடுவிலைச் சேர்ந்த சந்தையா சிவலோகநாதன் (வயது 32) என்பவருடைய சடலம் என அடையாளம் காணப்பட்டது.

மேற்படி சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது (85)

# மரண தண்டனை

(சுன்னாகம்)
ஒரு லட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்டமைக்காக விடுதலைப் புலிகளால் நேற்று நண்பகல்இரண்டு மணியளவில் தியாகு என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது

தியாகு எனப்படும் நாகராஜா பாலகுமார் (ஆஷா, வயது 18, சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்தவராகும். சுன்னாகப் பட்டினத்தில் நவீன சந்தைக்கு முன்னால் இவரது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# தங்கச் சங்கிலி கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)
முப்பது தங்கச் சங்கிலிகளை வயிற்றுக்குள் மறைத்து வந்த நபர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அகப்பட்டுக் கொண்டார்.

ஐந்நூறு கிராம் எடையுள்ள 30 தங்கச்சங்கிலிகளைப்பொலித்தீன் கடதாசியில் சுற்றி மலவாசல் வழியாக வயிற்றினுள் செலுத்தப்பட்டிருந்தது இது சுங்கப்பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

சிங்கப்பூரிலிருந்து சிறிலங்கா வந்த இந்தக் கடத்தல்காரருக்கு ரூபா 7, 50, 000 அபராதம் விதிக்கப்பட்டது.

### விசேட

இம்மாதம் ஆறாம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை இருபத்திமூன்றாம்திகதி நடக்கும். பின்னர் பழைய நேர அட்டவணைப்படிபரீட்சை இருபத்திமூன்றாம் திகதிக்குப் பின்வரும் நாட்களில் தொடர்ச்சியாக நடைபெறும். எனினும் சனி, ஞாயிறு தினங்களிலும், அரசாங்க விடுமுறை நாட்களிலும் பரீட்சைகள் நடைபெறாது என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது.

### க. பொ. த.

ளைப் பாடமாக எடுக்கும் மாணவர்கள் இப்புதியதிட்டத்தினால் பயனடைவார்கள்.

1960களில் ஆங்கில இலக்கியம் க.பொ.த. (சாதாரணம்) வகுப்புகளில் கற்பிக்கப்பட்டது. ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இது கைவிடப்பட்டது.

### தமிழர்

வாகரைவெள்ளையடிமடு என்னும் இடத்தில் வைத்து கணபதிப்பிள்ளை யோசராசா (வயது 46, வெள்ளையடிமடு) என்பவரைக் கைதுசெய்து அவ்விடத்திலேயே கொடூரமான முறையில் வெட்டிக் கொன்றுள்ளனர்.

★ மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காளைபோட்டமடு என்னுமிடத்தில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினரால் ஏழு தமிழ்ப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். மேலும் இப்பகுதியில் உள்ள ஏழு பொதுமக்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புதிய

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தற்போது 5, 058 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. எஞ்சிய 1, 491 விண்ணப்பங்களும் இந்த மாதம் முடிவடையும் முன்னர் பரிசீலிக்கப்பட்டுவிடும்.

ஓய்வூதியத்துடன் தொடர்பான ஆவணங்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் ஒரு மாதத்திற்கு மேல் தாமதம் ஏற்படாது என்று ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்தார்.

### மனித

புக்காவலில் இருந்தவர்களை விடுதலை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 680 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜூன்முடிவுக்குள் மேலும் 400 வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன. இந்தகவலை சிறிலங்கா சட்டத்தரணிகள் சங்கச் செயலர் உபுல் ஜெயசூரியா தெரிவித்தார்.

# புலமைப் பரிசுத் திட்டத்தில் ஆசிரியருக்கும் வாய்ப்பு

(கொழும்பு)
ஆசிரியர்களும் மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்தில் நன்மைபெற உள்ளார்கள்.

மஹாபொலத் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான நிதி ஒதுக்கீடை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஒதுக்கீட்டு நிதியிலிருந்து ஆசிரியர்கள் புலமைப்பரிசில், சுகவீனம் போன்ற தேவைகளுக்கான நிதி உதவியைக் கடனாகப்பெறலாம்என்று பல்கலைக்கழக மானியக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒக்டோபர் 6ஆம் திகதி ஆசிரியர் தினத்தன்று இதற்கான விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இந்நிதிக்கான பணத்தைத் திரட்டுவதற்கு செப்டெம்பர்30ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை கொடித்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. கல்வி, உயர்கல்வி அமைச்சு இதற்கான குழு ஒன்றையும் நிறுவியுள்ளது.

### தமிழர் உடைமை

பொருள்கள், தளபாடங்களையும் இராணுவ அதிகாரிகளின் வீடுகளுக்கு விலாசம் இடப்பட்டு அனுப்பப்படுவதாகத் தெரிகின்றது.

எல்லைப்புறக் கிராமங்களான 35ஆம் கிராமம், 37 ஆம் கிராமம், இன்னவத்தை, 34ஆம் கிராமம், 38ஆம் கிராமங்களில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் உடைக்கப்பட்டு ஓடு, மரம் கதவு நிலைகள் போன்ற கட்டடப் பொருள்கள் யாவும் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

தென்னைமரங்கள்வெட்டப்பட்டு இராணுவ முகாம்களில் காவல் அரண்களுக்கு பயன் படுத்தப்படுகின்றன.

### அவுஸ்ரேலிய

டித்துறையைச் சேர்ந்த மூத்த பிரஜைகள் மகஜர் ஒன்றை ஐ.நாவுக்கும், பொதுநலவாய உயர்ஸ்தானிகர்களுக்கும், அணிசேரா நாடுகளுக்கும் அனுப்பியிருந்தார்கள். அந்தக் கடிதத்திற்கு எழுதிய பதிலிலேயே ஜெனற் பவல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உங்களைப்போல அவுஸ்ரேலிய ஜனநாயகக் கட்சியும் தமிழர்கள் சிறிலங்காவில் கொடுமைப் படுத்தப் படுவது பற்றி அக்கறை கொண்டுள்ளது.

ஜனநாயகக்கட்சி வெளியுறவுத்துறைப் பேச்சாளரான செனற்றர் விக்கி போர்னிடம் கடிதத்தைக் கையளித்துள்ளோம். இப்பகுதியில் வேலை செய்வதற்கு உங்கள் கடிதத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் பயன்பொருத்தமாக அமையும்.

சிறிலங்காவில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி எமக்கு அறியத்தந்ததற்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### விடுதலைப்

வெடுப்புப் பிரிவைச் சேர்ந்த திரு. பரா தெரிவித்துள்ளார் நேற்று முன்தினம் மாலை இப்பிரிவினரின் போர்க்காலக் கருத்தரங்கு வலிகாமம் பிரதேசத்தில் குருநகர் மிழக்கு, திலீபன் சிற்றூர், அரியாலை, பூம்புகார், யாழ். மத்தி, ஏழாம் குறுக்குத்தெரு, குருநகர் தொடர்மாடி வீட்டுத் திட்ட முன்றல் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இக்கருத்தரங்குகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. பரா, திரு தினேஸ், கவிஞர் வாஞ்சிநாதன் ஆகியோரும், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி தேன்மொழி, செல்வி அன்பரசி, செல்வி ரூபலதா மற்றும் திரு. தனபால் திரு. குகதாஸ் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்

### காளைபோட்ட

இத்தாக்குதல்களால் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் மேற்பட்டதாயினும் சரியான சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது